# சேப்பாக்கம் - திருவல்லிக்கேணியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நல உதவிகள் வழங்கினார்!



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.10.2024) சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் திருநங்கைகள் மற்றும் திருநம்பிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சென்னை பெருநகர மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, பகுதிச் செயலாளர் ஏ.ஆர். பி.எம்.காமராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.



கழகத்தலைவர் – முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவின்பேரில், கலைஞர் நூற்றாண்டு நிறைவு – கழக பவள ஆண்டு நிறைவு மற்றும் விழாக்காலத்தை முன்னிட்டு, திருவல்லிக்கேணி பகுதியைச் சேர்ந்த கழக நிர்வாகிகள் – பொதுமக்கள் 1,500 பேருக்கு பல்வேறு நலத்திட்ட பொருட்கள் அடங்கிய தொகுப்பினை இராயப்பேட்டையில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். உடன் தயாநிதி மாறன் எம்.பி., மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக தன் வாழ்நாளெல்லாம் உழைத்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு மற்றும் கழகத்தின் பவள விழா ஆண்டின் நிறைவை முன்னிட்டு, சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதி மக்களுக்கு தொடர்ந்து நலத்திட்ட உதவிகளை வழங்கி வரும் வகையில், சேப்பாக்கம் பகுதி, 63–அ வட்டம், இராயப்பேட்டை – நைனியப்பன் தெருவைச் சேர்ந்த 1000 பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.



கழகத்தலைவர் –முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதி, சேப்பாக்கம் பகுதியைச் சேர்ந்த 1000 கழக நிர்வாகிகளுக்கு கலைஞர் நூற்றாண்டு நிறைவு – கழக பவள விழா ஆண்டு நிறைவு மற்றும் விழாக்காலத்தை முன்னிட்டு சிந்தாதிரிப்பேட்டையில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். உடன் தயாநிதி மாறன் எம்.பி., மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, பகுதிச் செயலாளர் எஸ். மதன்மோகன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



கழகத்தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்பேரில், சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதி, சேப்பாக்கம் பகுதி, 62–ஆவது வட்டம், சிந்தாதிரிப்பேட்டை அக்ரகாரத் தெருப் பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் 1000 பேருக்கு நலத்திட்ட உதவிகளை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

## கூட்டணி உடையும் என்கிற எண்ணம் ஒருபோதும் வெற்றி பெறாது!

# கொள்கை அடிப்படையில் தி.மு.க.வை ஆதரிக்கிறோம்!

### “ஜனசக்தி” இதழில் - இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்

### தமிழ் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் “ஜூனியர் விகடனுக்கு” பதிலடி!

சென்னை, அக். 30-

கொள்கை அடிப்படையில் தி.மு.க.வை ஆதரிக்கிறோம். எங்கள் கூட்டணி உடையும் என்கிற எண்ணம் ஒருபோதும் வெற்றி பெறாது என்று ஜூனியர் விகடன் இதழில் வெளியான கட்டுரைக்கு பதிலளித்து, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் அவர்கள் ஜனசக்தி இதழில் குறிப்பிட்டுள்ளார்.



அவரது பதிலடி வருமாறு:-

‘ஆடு நனைவதைக் கண்டு ஓநாய் அழுததாம்’ என்று ஒரு பழமொழி உண்டு.

“இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தனது போராட்டக் குணங்களை இழந்து விட்டது. மக்கள் பிரச்சினைகள் எதுவானாலும் களத்தில் நின்று போராடும் கட்சி தற்போது போராடுவதில்லை. கண்டும் காணாமல் உள்ளது.”

வி.சி.க.வின் “மது ஒழிப்பு மாநாட்டில் தொடங்கி, சாம்சங் நிறுவனம் போராட்டம் வரையில் தி.மு.க.வின் பிரச்சாரப் பிரிவுகளாகவே கூட்டணிக் கட்சி தலைவர்கள் மாறிப் போய் விட்டார்கள் எனப் புலம்பித் தீர்க்கிறார்கள் தி.மு.க. உறவாய் இருக்கும் கூட்டணிக் கட்சிகளின் இரண்டாம் கட்ட நிர்வாகிகள். என்ன தான் நடக்கிறது தி.மு.க. கூட்டணிக்குள்?” என்கிற வினாவுடன் விரிவான கட்டுரை ஒன்றை ஐந்து பக்கங்களுக்குக் குறையாது 20.10.2024 தேதியிட்ட ஜூனியர் விகடன் வார இதழ் வெளியிட்டுள்ளது.

இந்த இதழ் மட்டுமல்ல, வேறு சில தின மற்றும் வார ஏடுகளும் இதுபோன்ற விமர்சனங்களையும், உபதேசங்களையும் வாரி வழங்கி வருகின்றன.

இத்தகைய உபதேசங்கள் உள்நோக்கமுடையன. கட்சித் தலைமைக்கும், அணிகளுக்கும் இடையே முரண்பாட்டை உருவாக்கிக் குளிர் காய விரும்பு கின்றன. இத்தகைய ஏடுகளுக்கு என ஓர் அரசியல் உள்ளது. அது என்ன அரசியல் என்பதனை வெளிப்படுத்திட மாட்டார்கள். அத்தகைய துணிச்சல் அவர்களுக்குக் கிடையாது.

#### புழுதிவாரி இறைப்பர்!

தங்களது ஏடுகள், ஒரு நடுநிலை தவறா நல்ஏடு என்று பறைசாற்றிக் கொள்வார்கள். ஆனால் வெளியே தெரியாமல் ஒரு சார்பு நிலை அரசியலை மேற்கொள்வார்கள். அவர்களது அரசியல் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக பிறர் மீது புழுதிவாரி இறைப்பார்கள்.

ஒன்றியத்தில் இருக்கும் ஆட்சி கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக மேற்கொள்ளும் கொள்கை என்ன? யாருடைய நலன்களுக்காக அவர்கள் ஆட்சி நடத்துகின்றார்கள்? மக்களுக்கான ஆட்சியா? அல்லது விரல் விட்டு எண்ணக் கூடிய நபர்களான அம்பானி, அதானி இத்தியாதிகளுக்கான ஆட்சியா? யார் நலன் பாதுகாக்கப்படுகின்றது? யார் நலன் புறக்கணிக்கப்படுகிறது?.

எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களை புறக்கணிப்பார்கள். அம்மாநில மக்கள் இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்படும் போது அதனை கண்டு ரசிப்பார்கள். தங்களது கட்சி ஆட்சி புரியும் அல்லது தங்களை ஆதரிக்கும் கட்சி ஆளும் மாநிலங்களுக்கு நிதியை வாரி வாரி வழங்குவார்கள்.

இந்திக்கும், சமஸ்கிருத மொழியின் வளர்ச்சிக்கும் அள்ளி, அள்ளிக் கொடுப்பார்கள். தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு போன்ற மொழிகளுக்கு கிள்ளிக் கொடுப்பார்கள்.

இரு மொழிக் கொள்கையை ஏற்று அமல்படுத்தி வரும் தமிழ்நாட்டில், மும்மொழிக் கொள்கையை ஏற்றுக் கொண்டால்தான் உனக்கு நிதி கொடுப்பேன். இல்லையென்றால் கொடுக்க மாட்டேன். கொடுக்க முடியாது. எங்கள் கொள்கையை ஏற்று கையெழுத்து போடுகிறாயா? இல்லையா என்று பகிரங்கமாக ஒன்றிய அமைச்சர் அறிக்கை வெளியிடுகிறார். வெளியிட்டது மட்டுமல்ல, தமிழ்நாட்டு ஆட்சியர்களுக்கு, பணியாளர்களுக்கு சம்பளம் போட முடியாமல் பட்டினிக்குத் தள்ளுகிறார்.

#### பகிரங்க வன்முறை!

மாநில அரசு பொறுப்பேற்று தன்னுடைய நிதியிலிருந்து, நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டிய கட்டாய நிலைக்கு உள்ளாக்குகிறார்.

மதத்தின் பேராலும், சாதியின் பேராலும் நாட்டு மக்களை பிளவுபடுத்து கிறார்கள். ஆர்.எஸ்.எஸ் தலைவர் மோகன் பகவத் பகிரங்கமாக வன்முறையைத் தூண்டுகிறார்.

இவைகள் எல்லாம் எங்களுக்கு உபதேசம் செய்யும் ஏடுகளுக்கும், நபர்களுக்கும் தெரியவில்லையா? அல்லது தெரியாதது போன்று நடிக்கின்றார்களா? உண்மையில் தூங்குகிறவனை எழுப்பி விடலாம். தூங்குவது போல் நடிப்பவர்களை ஒருபோதும் எழுப்பிட இயலாது.

வகுப்பு வாதத்திற்கு எதிரான போராட்டத்தில், பாசிசத்திற்கு எதிரான போராட்டத்தில், ஜனநாயகத்திற்கான போராட்டத்தில், மாநில உரிமைகளுக்கான போராட்டத்தில், மதச்சார்பின்மைக்கான போராட்டத்தில், தி.மு.க. தலைமை வழுவாமல் போராடுகிறது.

ஆகவே, கொள்கை அடிப்படையில் தி.மு.க.வை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரிக்கிறது. இது தொடரும்,

#### சிண்டு முடிகிற வேலை!

பா.ஜ.க.வை எதிர்த்து தமிழ்நாட்டில் காலூன்ற முடியாமல் தடுக்கிற வலுவான கூட்டணி இனியும் தொடர்வதை எஜமானர்கள் விரும்பவில்லை. எனவே, அந்தக் கூட்டணி உடைந்து சிதறப் போகிறது என்ற புதிய தோற்றத்தை உருவாக்கக் கடும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. எனவே, இந்த இரண்டு நிகழ்வுகள் மீது ஊடகங்கள் அதிக வெளிச்சத்தைப் பாய்ச்சுகின்றன. சிண்டு முடிகிற வேலையை செய்து பார்த்தவர்கள். தோற்றுப் போன கோபத்தில் புழுதி வாரி இறைக்கிறார்கள். இவர்களின் நோக்கம் தி.மு.க. தலைமையிலான கூட்டணி உடைந்து, சுக்கு நூறாக வேண்டும் என்பதாகும்.

அவ்வாறு ஏற்பட்டால் தங்களின் அரசியல் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்கிற நப்பாசையுடன், நாக்கைத் தொங்க போட்டுக் கொண்டு அலையும் கூட்டமே!

உங்களின் குள்ளநரி தந்திரங்கள், கொள்கை உடையவரிடம் ஒருபோதும் வெற்றி பெறாது என்பது இன்று, நேற்று அல்ல, காலங்காலமாக உணர்த்திய பேருண்மை என்பதை மறந்து விட வேண்டாம்.

இவ்வாறு இந்திய கம்யூனிஸ்ட் தமிழ் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தெரிவித்துள்ளார்.



விழுப்புரம் பொன்னங்குப்பத்தைச் சேர்ந்த மோகனவேல் என்பவர் உஸ்பெகிஸ்தான் நாட்டில் நடைபெற்ற ஆசியா சேம்பியன்ஷிப் போட்டியில் பென்காக் சிலாட் பிரிவில் கலந்து கொண்டு வெண்கல பதக்கத்தை வென்றார். அதனை தொடர்ந்து வனத்துறை அமைச்சர் முனைவர் க பொன்முடி, விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி ஆகியோரைச் சந்தித்து வாழ்த்துக்களைப் பெற்றார். விழுப்புரம் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், அனைத்து விளையாட்டு கழகங்களின் ஒருங்கிணைப்பாளர் வாலிபால் மணி பொன்னங்குப்பம் முரளி உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

## கூட்டுறவுத் துறையின் சார்பில்

# ‘கூட்டுறவுக் கொண்டாட்டம்’ - தீபாவளி சிறப்புத் தொகுப்பு விற்பனை!

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தொடங்கி வைத்தார்!

சென்னை, அக்.30-

கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் நேற்று முன்தினம் (28.10.2024) சென்னை தேனாம்பேட்டை, டி.யு.சி.எஸ். காமதேனு கூட்டுறவு அங்காடியில் கூட்டுறவுத் துறையின் மூலம் நடைபெற்று வரும் பட்டாசு விற்பனையை பார்வையிட்டார்.

பின்னர், “கூட்டுறவுக் கொண்டாட்டம்“தீபாவளி சிறப்புத் தொகுப்பு விற்பனையைத் துவக்கி வைத்துப் பார்வையிட்டார்.

செய்தியாளர்கள் சந்திப்பில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் கூறியதாவது:

தமிழ்நாடு வேறுபட்ட மொழிகளை மதங்களை கொண்ட நாடாக இருந்தாலும், அவரவர்கள் கொண்டாடும் பண்டிகைகள் தனித் தனியாக உள்ளது. அந்த வகையில் இந்துக்கள் பெரும்பான்மையோர் கொண்டாடுகின்ற ஒரு பண்டிகை தீபாவளிப் பண்டிகை, அந்த தீபாவளி பண்டிகையைக் கொண்டாடும் விதமாக அவரவர் இல்லங்களில் அவரவர்கள் வசதிக்கேற்றவாறு பலகாரங்கள் போன்ற ஒன்றைச் செய்வதும் அதைப்போல உணவு வகைகளை சிறப்பாக தயாரித்து குடும்ப உறுப்பினர்கள் மற்றவர்களுக்கு வழங்குவதையும் வாடிக்கையாகக் கொள்வதோடு, பட்டாசுகளை வெடித்து மகிழ்ச்சிகரமாக இந்தத் தீபாவளி பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள்.

அந்த வகையில், தீபாவளி பண்டிகைக்குத் தேவையான அனைத்துப் பொருள்களும் தமிழக அரசின் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக பல்வேறு வகைகளில் கொண்டு சேர்க்கப்படுகிறது. குறிப்பாக, தீபாவளியின் சிறப்பாகக் கருதப்படுகின்ற பட்டாசு விற்பனையிலும், நம்முடைய கூட்டுறவுச் சங்கங்கள் ஈடுபட்டு வருகிறது. இன்று நேற்று அல்ல பல ஆண்டு காலமாக அந்தப் பணியை கூட்டுறவுச் சங்கங்கள் செய்து வருகின்றன. அதைப்போல, ஏற்கனவே குறிப்பிட்டுச் சொன்னதைப் போல சிறப்பு வகையான உணவுகள் மற்றும் பலகாரங்கள் தயாரிப்பதற்கான பொருள்களை யும், பட்டாசு உள்ளிட்ட அனைத்துப் பொருட்களையும் கூட்டுறவு விற்பனை சங்கங்களின் மூலமாக தரமான பொருள்களை, அதே நேரத்தில் மிகக் குறைந்த விலையில் மக்களுக்கு தன்னுடைய சேவையாக இந்த நிறுவனங்கள் செய்து வருகிறது என்பதை நாட்டு மக்கள் நன்கு உணர்வார்கள். இன்றும், மூன்று வகையான பொருட்கள் அறிமுகப்படுத்தப்பட்டது.

திருவொற்றியூரில் தொடங்கி சைதாப்பேட்டை மற்றும் மேற்கு சென்னையைச் சேர்ந்த பகுதிகளிலிருந்து மட்டுமல்லாமல், பல்வேறு பகுதிகளில் இருந்து இந்த டி.யு.சி.எஸ். நிறுவனம் தேனாம்பேட்டை காமதேனு கூட்டுறவு வளாகத்தில் பொருட்களை வாங்கிச் சென்றது, இந்த நிறுவனத்தில் பொதுமக்கள் வைத்திருக்கின்ற நம்பிக்கையை உறுதிப்படுத்துகிறது என்பதை நாம் உணர முடிகிறது. அந்த வகையில், மக்களுடைய நம்பிக்கையைப் பெற்று தரமான பொருட்களை குறைவான விலையில் மக்களுக்கு சேவையாகச் செய்கின்ற நிறுவனம் தான் இந்த கூட்டுறவுச் சங்கங்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

எப்படி ஆடைகள், அணிகலன்கள் இவற்றில் புதுமைகளைப் புகுத்துகின்றார்களோ, அதைப்போல, மக்களுடைய எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றவாறு நம்முடைய கூட்டுறவு நிறுவனங்களைச் சார்ந்த அலுவலர்கள் ஒரு புதிய ஏற்பாட்டினை இந்த தீபாவளியை முன்னிட்டு செய்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில், அதிரசம், முறுக்கு தொகுப்பு, அதை ரூ.190 அளவில் வழங்குகிறார்கள். அதைப்போல சமையலுக்குப் பயன்படுத்துகின்ற பருப்பு உள்ளிட்ட 14 வகையான பொருட்களின் தொகுப்பை PREMIUM மளிகைப் பொருட்களை ரூ.199 மதிப்பிலும், அதைப்போல் ‘எலைட்’ மளிகைப் பொருட்கள் ரூ.299 என்ற மதிப்பில் அனைத்தும் தரமான பொருட்களாக, மிகக் குறைந்த விலையில் சிறிய குடும்பங்களும் பெரிய சேமிக்கக் கூடிய அளவிற்கான தொகுப்புகளாக இங்கே தொகுத்திருக்கிறார்கள்.

ஆண்டுதோறும் பட்டாசு விற்பனையில் நம்முடைய கூட்டுறவுச் சங்கங்கள் மிகப் பெரிய சாதனையைப் படைத்து வந்திருக்கிறது. இந்த ஆண்டும் ஏறத்தாழ கூட்டுறவு சங்கங்களின் மூலமாக 107 கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாக 166 பட்டாசு மையங்களில் விற்பனை செய்யப்படுகிறது. இந்த ஆண்டு விற்பனை ரூ. 20 கோடியை தாண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பட்டாசுகள் ஆபத்து நிறைந்தது என்ற காரணத்தினால், அரசினுடைய தரக்கட்டுப்பாடு முழுமையாக அதிலே கடைபிடிக்கப்பட்டிருக்கிறது. சுற்றுச் சூழலுக்கு மாசு ஏற்படாத வகையில் பசுமைப் பட்டாசுகள் இந்த சங்கங்களின் மூலமாக விற்பனை செய்யப்படுகிறது.

முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில் மக்களுக்கு எந்தெந்த வகையில் அவர்களுடைய சுமைகளைக் குறைக்க வேண்டும் என்று எதிர்பார்கிறார்களோ, அதைவிட கூடுதலாக ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு துறையிலும் முதலமைச்சர் அவர்கள் அறிவுரைகளை வழங்கி, பொதுமக்களைப் பாதுகாக்கின்ற ஒரு அரசாக, மக்கள் நலம் பேணுகின்ற ஒரு நல்ல அரசாக இந்த அரசை நடத்துகிறார்கள், இந்த தீபாவளியை முன்னிட்டு கூட்டுறவுத் துறைக்கு சில அறிவுரைகளை வழங்கி இது போன்ற பணிகளைச் செய்ய அறிவுறுத்தியுள்ளார்.

இந்த மளிகைத் தொகுப்பு விற்பனை தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறும். காமதேனு விற்பனை அங்காடி மக்களிடத்தில் பெரும் வரவேற்பைப் பெற்ற நிலையில் எதிர்காலத்தில் நியாய விலைக் கடைகளில் போதுமான இட வசதிகள் இருந்தால், அங்கும் இந்நிலையங்கள் அமைக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.